இஸ்லாமிய போதனைகளின் ஒளியில்

# உண்மையான அமைதி

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்



இஸ்லாமிய போதனைகளின் ஒளியில்

# உண்மையான
# அமைதி

சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன்

**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்**

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

அவர்கள் ஆகஸ்ட் 21, 2022 அன்று

ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு


**வெளியிடுவோர்:**

**நஸாரத் நஷ்ரோ இஷாஅத்**

**சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்**

**குர்தாஸ்பூர், பஞ்சாப் - 143 516**

Tamil Translation of the book

# Haqeeqi Aman
# Islami Taleemat ki Roshni me
# (இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் உண்மையான அமைதி)


Speech by : Hazrat Mirza Masroor Ahmad[aba], (Khalifatul Maseeh V)

Translated by : Maulavi. Atha-ul-Mugnee M.A.,

Composed by : Maulavi. Atha-ul-Mugnee M.A.,

Bookset by : Maulavi. Atha-ul-Mugnee M.A.,

Year : 2024

Copies : 500

Published by : Nazarat Nashr-o-Isha'at,
Qadian - 143 516
Gurdaspur
Punjab, India

Printed at : Fazl-e-Umar Printing Press
Gurdaspur, Qadian - 143 516
Punjab

Noorul Islam Toll Free No: 1800 103 2131

Tamil Toll Free No: 1800 425 40000

# பதிப்புரை

சய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஆகஸ்ட் 21, 2022 அன்று ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு, 2023 ஆம் ஆண்டின் இந்திய மஜ்லிஸே ஷூராவின் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆலோசனைக்கு ஏற்ப **'ஹகீக்கீ அமன் இஸ்லாமீ தஃலீமாத் கீ ரோஷ்னீ மே(ன்)'** என்ற தலைப்பில் நூலாக வெளி வருகிறது. இந்த நூலை மவ்லவி அத்தாவுல் முஃக்னீ அவர்கள் **'இஸ்லாமிய போதனைகளின் ஒளியில் உண்மையான அமைதி'** என்ற பெயரில் தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

இதை, சரிபார்ப்புக் குழு உறுப்பினர் மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப் அவர்களும், தமிழ்த் துறை இன்சார்ஜ் மவ்லவி A.P.A தாரிக் அஹமது அவர்களும் மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள். மேலும், தமிழ்நாடு புத்தக சரிபார்ப்புக் குழுவின் தலைவர் ஜனாப் J.S. சலீம் அஹ்மது சாஹிப் அவர்கள் இந்நூலை முழுமைப்படுத்துவதில் ஒத்துழைப்பு நல்கியுள்ளார்கள்.

அவர்கள் அனைவருக்கும் அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்
எளியவன்
**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
நாஸிர் நஷ்ரோ இஷாஅத் காதியான்

நமக்கு மேல் ஒருவன் இருக்கிறான் என்பதை ஏற்றுக் கொள்ளாத வரை .... உண்மையான அமைதி நிலை பெற முடியாது. அல்லாஹ் அமைதியை வழங்கக்கூடியவன் என்ற கொள்கையை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாக இஸ்லாம் மட்டுமே முன் வைத்துள்ளது.

---

"ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவ மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். குடியிருப்புகள் பாழடைந்து போவதைப் பார்க்கிறேன்."

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

---

இத்தகைய நிலையில் ஏதாவது நம்பிக்கையின் ஒளிக்கதிர் தென்படுகிறது என்றால், அமைதிக்கான உத்தரவாதம் இருக்கிறது என்றால், ஒரே ஒரு நபர் தான் இருக்கின்றார். அல்லாஹ் அவர்களை அமைதி மற்றும் சமாதானத்தின் போதனையுடன் உலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தான்.

---

அவர்கள் அமைதியின் பேரரசர் ஆவார்கள். அவர்கள் எல்லா மனிதர்களை விடவும் அல்லாஹ்வுக்கு அதிக நேசத்திற்குரியவர் ஆவார்கள். அவர்கள் மீது அல்லாஹ்வின் இறுதியான, முழுமையான, முழுமை செய்யப்பட்ட ஷரீஅத் இறங்கியது. அவர்களது போதனை அன்பு, நேசத்திற்கான போதனையாகும்.

**தனது சொந்த, குடும்ப, சமுதாய, தலைமுறை சார்ந்த மற்றும் நாட்டின் முன்னுரிமைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு, (அமைதியை) நிலைநாட்ட முயற்சி செய்யும் போதும், ஒரே மையப் புள்ளியை அடைவதற்கு முயற்சி செய்யும் போதும்தான் உண்மையான அமைதி ஏற்படும்.**

---

**'எனக்கு மேல் உயர்ந்தவன் ஒருவன் இருக்கிறான்; அவன் எனக்காக மட்டுமே அமைதியை விரும்புதில்லை; மாறாக, முழு உலகிற்காகவும் அமைதியை விரும்புகிறான் ...... என்று மனிதன் புரிந்து கொள்ளும் போதும், அந்த அறிவையும், புரிதலையும் உருவாக்கிக் கொள்ளும் போதும்தான் உண்மையான அமைதி உருவாக முடியும்.'**

---

**அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனும் தன் ஒளியை அனுப்பி; அனைத்து வகை அறிவு, இறைஞானங்களின் தலையூற்றும், நேர்வழியின் ஒளியும், அமைதியின் தூதுச் செய்தியுமான திருக்குர்ஆன் எனும் (தனது) ஒளிமிக்க மறையையும் அனுப்பி மனித குலத்தின் மீது மிகப் பெரும் அருள் புரிந்திருக்கிறான். இதிலிருந்து மனிதன் பலன் பெறவில்லை என்றால், அழித்து விடக்கூடிய தன்னுடைய தன்னலத்தின் ஆதாயங்களுக்கே சிறையில் அடைபட்டவனாக இருந்தால், இதை விட மோசமான பேறிழந்த நிலை வேறு என்ன இருக்க முடியும்?**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியருடன் இணைவதும் அவசியமாகும். அப்பொழுதுதான் அறிவு மற்றும் இறைஞானத்தின் சரியான புரிதல் கிடைக்க முடியும்.

---

இன்று இந்தப் பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாமும் வீட்டின் மட்டத்திலிருந்து சர்வதேச அளவு வரை இதற்கு ஏற்ப நமது பங்களிப்பை நிறைவேற்றவில்லை என்றால், நாமும் அமைதி மற்றும் சமாதானத்தில் இருப்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

---

நம்முடைய எதிரிகள் என்ன வேண்டுமானாலும் சிந்திக்கட்டும்; செய்யட்டும். நம்முடைய வேலை என்னவென்றால், நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உண்மையான அன்பு இருக்கிறது என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனையை நாம் பின்பற்ற வேண்டும்; உலகத்தில் பரப்ப வேண்டும்.

---

இன்று உலகத்தில் அமைதியும் சமாதானமும் ஏற்படுவதற்கு ஒரே தீர்வு இதுதான் என்று உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். எனவே, வாருங்கள்! அமைதி மற்றும் சமாதானத்திற்கான போதனையை வழங்கக்கூடிய இந்த மாபெரும் நபருடன் இணைந்து இம்மையிலும் மறுமையிலும் உங்களது அமைதிக்கான ஏற்பாட்டைச் செய்து கொள்ளுங்கள்.

**மக்களிடம் உண்மையான சகோதரத்துவம்
உருவாகாத வரை அமைதி நிலைபெறவே முடியாது.
மேலும், ஓரிறைவனை ஏற்காமல் உண்மையான
சகோதரத்துவம் உருவாக முடியாது.**

---

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது
இறங்கிய முழுமையான ஷரீஅத்தில்
எடுத்துரைக்கப்பட்டுள்ள போதனைகளின் ஒளியில்
உண்மையான மற்றும் உறுதியான உலகளாவிய
அமைதியை நிலைநாட்டுவது குறித்து
அகப்பார்வையை ஒளியூட்டக்கூடிய சொற்பொழிவு**

---

**ஜமாஅத் மக்கள் தங்களது நடைமுறையை
இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப ஆக்கிக்
கொண்டவாறு உலகத்திற்கு உன்னதமான
முன்மாதிரியை நிலைநாட்டுவதற்கான வலியுறுத்தல்**

---

**அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் 2022ஆம்
ஆண்டின் ஆண்டு மாநாட்டின் நிறைவு அமர்வில்
சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது
கலீஃபத்துல் மஸீஹ் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத்
(அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய
மகத்துவமிக்க, அகப்பார்வையை ஒளியூட்டக்கூடிய,
உள்ளம் கவர்ந்த சொற்பொழிவு**

**(ஆகஸ்ட் 21, 2022 ஞாயிற்றுக்கிழமை அன்று, யூகேவின்
டில்ஃபோர்டில் உள்ள இஸ்லாமாபாதின் அய்வானே மஸ்ரூர்
எனும் பள்ளிவளாக அரங்கில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு)**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾

صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

எல்லாம் வல்ல அல்லாஹ் உலகத்தின் இன்றைய கால சூழ்நிலையிலும், **ஜெர்மனியிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத்திற்குத் தனது ஆண்டு மாநாட்டை நடத்துவதற்கான நல்வாய்ப்பை வழங்கியுள்ளான்.** இது அவனுடைய மாபெரும் அருளும் கருணையும் ஆகும். சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில், பரந்த ஏற்பாடுகளுடன் நீங்கள் இந்த ஆண்டு மாநாட்டை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

முதலில் கோவிட் (Covid) தொற்றுநோய் உலகைக் கடுந்துயரத்திற்குள்ளாக்கியது. இன்னும் அந்தத் தொற்று நோயின் துயரம் முடிவுக்கு வரவில்லை; அதற்குள் உலகத்தில் போர்களின் சூழல் உலகத்தை மிக ஆபத்தான ஒரு கட்டத்தில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது. உலகத்தின் எந்தப் பகுதியும் வரவிருக்கும் இந்தப் பேரழிவில் இருந்து பாதுகாப்பாக இருப்பதாகத் தெரியவில்லை. **ஒரே இறைவன் பக்கம் நாம் திரும்பாத வரை பேரழிவில் இருந்து தப்பவும் முடியாது.**

முதலில் ஐரோப்பாவும் மேற்கத்திய நாடுகளும், முன்னேற்றம் அடைந்த நாடுகளும், ‘போர்களின் சூழல், குழப்ப சூழல், நகரங்கள் மற்றும் நாடுகளின் பேரழிவிற்கான நிலைமைகள் எங்கு உருவாகி உள்ளனவோ அல்லது உருவாகி வருகின்றனவோ அவை நம்மை விட்டு ஆயிரம் மைல் தொலைவில் உள்ளன. நாம் பாதுகாப்பாக இருக்கிறோம். நிலைமைகள் மோசமாக இருக்கின்றன; குண்டுகள் வீசப்படுகின்றன; மக்கள் (எல்லாம்) மரணித்துக் கொண்டிருக்கின்றனர்; பெண்கள் விதவைகள் ஆகிக் கொண்டிருக்கின்றனர்; பிள்ளைகள் அநாதைகள் ஆகிக் கொண்டிருக்கின்றனர்; மேலும், மக்கள் உடல் உறுப்புகளை இழந்தவர்களாகிக் கொண்டிருக்கின்றனர் என்றால், அது ஆசியாவிலும், மத்தியகிழக்கு நாடுகளிலும், ஏழை நாடுகளிலும்தான் ஆகிறார்கள். நமக்கென்ன வந்தது’ என்ற கற்பனையில் இருந்தன.

நம்முடைய ஆயுதங்கள் விற்பனையாகிக் கொண்டே இருக்கட்டும்; இவர்கள் மரணிக்கின்றனர் என்றால் மரணிக்கட்டும்; நமக்கென்ன ஏற்படப் போகிறது என்று முன்னேற்றம் அடைந்த நாடுகள் இந்த நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்கிக் கொண்டிருந்தன. ஆனால், தமக்கும் இந்நிலை ஏற்படலாம் என்பதை அவை மறந்து விட்டன. தமது முன்னேற்றத்தைப் பற்றிய கற்பனையில் அவர்களின் அறிவு மழுங்கி விட்டது. கண்கள் குருடாகி விட்டன.

பிறகு, **எது நடப்பதற்கான ஆபத்து இருந்ததோ அதுதான் நடந்தது என்பதை இப்போது முழு உலகமும் பார்த்துக் கொண்டிருக்கிறது.**

**ஐரோப்பாவிலும் போருக்கான நிலைமைகள் உருவாகிவிட்டன.**

உக்ரைன் காரணமாக, ரஷ்யாவும் நேட்டோ (NATO) நாடுகளும் எதிரெதிரே நின்று கொண்டிருக்கின்றன. கடைசியில் யார் மேலோங்க இருக்கிறார்கள் அல்லது இருபுறமும் எவ்வளவு இழப்பு ஏற்பட இருக்கிறது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால், இதன் விளைவுகள் மிகவும் ஆபத்து வாய்ந்தவையாக இருக்கும் என்பது உறுதி. **இப்போதும் அறிவுடன் செயல்படவில்லை எனில், இதன் முடிவு ஒரு பயங்கரமான பேரழிவாக இருக்கும்.**

இப்பொழுது நாம், தைவான் பிரச்சனையும் துவங்கி விட்டதைப் பார்க்கிறோம். இப்பொழுது முழு உலகமும் பயங்கரமான போரின் விளிம்பில் நின்று கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. அல்லாஹ்வால் இந்தக் காலத்திற்கு அனுப்பப்பட்ட தூதர் (இது பற்றி) மிகவும் அழுத்தமாக இவ்வாறு எச்சரித்துள்ளார்கள்:

**"ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவ மாட்டான். நான் நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். குடியிருப்புகள் பாழடைந்து போவதைப் பார்க்கிறேன்."** (நூல்: ஹகீக்கத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 269)

இதுவே அந்த வழிகாட்டலாகும்; எச்சரிக்கை ஆகும்; Warning ஆகும். இதன் காரணமாகவே, அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்கள் அவ்வப்போது

கவனமூட்டி வந்துள்ளார்கள். நானும் ஒரு நீண்ட காலமாக இதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டிருக்கிறேன். **உங்களைப் படைத்த, ஒருவனான, இணையற்றவனான அந்த இறைவன் பக்கம் திரும்பவில்லை என்றால் அழிவு நிச்சயம்** என்று கூறிக் கொண்டிருக்கிறேன்.

நாடுகளின் கூட்டணிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இதன் கடைசி விளைவு ஒருவர் மற்றவரை அழிப்பதில் சென்று முடியும். எனவே நீங்கள் விழித்துக் கொள்ளுங்கள் என்று நான் நீண்ட காலமாக கூறிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால், இந்த மக்கள் பெரும்பாலும் இந்த விஷயங்களைக் கேட்கின்றனர். (முன்பும்) கேட்டுக் கொண்டிருந்தனர்; இப்போதும் கேட்கின்றனர். அவர்கள், 'நிலைமை சற்று மோசமாகத் தான் இருக்கிறது. சரிதான்! ஓரளவு மோசமாகத்தான் இருக்கிறது. ஆனால், நீங்கள் படம்பிடித்துக் காட்டிக் கொண்டிருக்கும் அளவிற்குப் பயங்கரமான, அவநம்பிக்கை அடையச் செய்யும் நிலைமை ஒன்றும் இல்லை' என்று கூறி வந்தனர்.

என்னிடமும் மக்கள் கூறினர். நம் ஜமாஅத்தாரிடமும் மக்கள் கூறி இருக்கின்றனர். ஆனால், **மேலோட்டமாக அந்த விஷயங்களைப் பார்த்து வந்த அதே மக்கள், நிலைமைகள் மோசத்திலும் மோசமாகிக் கொண்டே செல்கின்றன. இதே நிலைமைகள் நீடித்தால், எந்நேரமும் பயங்கரமான போர் சூழல் உருவாகலாம் என்று இப்பொழுது கூற ஆரம்பித்து விட்டனர்.**

இப்பொழுது இந்த விஷயங்களை இவர்களின் திங்-டேங் (think tank - ஆலோசனை வழங்கும் நிபுணர்) குழுவினரும், பொது ஆய்வாளர்களும் கூற ஆரம்பித்து விட்டனர். ஆனால், அவ்வாறிருந்தும் நிரந்தர அமைதியை நிலைநாட்டுவதற்கான தீர்வு இவர்களிடம் இல்லை. அமைதியின் நீருற்றின் பக்கம் இவர்களது பார்வையே இல்லாதபோது, (தீர்வு) எப்படி இருக்க முடியும்? உலகத்தில் மூழ்கியுள்ளனர்; மார்க்கத்தை மறந்து விட்டனர். **அமைதிக்கான தீர்வு எங்கு இருக்கிறதோ அங்கு இந்த முஸ்லிம் அல்லாத சமுதாயமும் வர விரும்புவதில்லை; பேறிழந்த நிலைமையால் முஸ்லிம் அரசாங்கங்களும் வர விரும்புவதில்லை.**

இப்போது சில இடங்களில் ஒரு கணிப்புப்படி, ஆய்வாளர்கள் போர் நடக்கும்போதும் அதற்குப் பிறகு வரும் இரு வருடங்களிலும், அணு ஆயுதங்களைப் பயன்படுத்திய காரணத்தால், உலகின் 66 விழுக்காடு மக்கள் தொகையே அடியோடு அழிந்துவிடும் அளவிற்கு, போர்களினால் ஏற்படவிருக்கும் பேரழிவு பயங்கரமானதாக இருக்கும் என்றும் கூறுகின்றனர். எவரும் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவுக்கு அழிவும், நாசமும் ஏற்படும். ஒரு சாதாரண மனிதனாலோ இதைப் பற்றி சிந்தித்துக் கூட பார்க்க முடியாது. எனவே, மிக பயங்கரமான நிலைமைகள் உள்ளன.

**இத்தகைய நிலையில் ஏதாவது நம்பிக்கையின் ஒளிக்கதிர் தென்படுகிறது என்றால், அமைதிக்கான உத்தரவாதம் இருக்கிறது என்றால், ஒரே ஒரு நபர் தான் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களை**

**அமைதி மற்றும் சமாதானத்தின் போதனையுடன் உலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தான். அவர்கள் அமைதியின் பேரரசர் ஆவார்கள். அவர்கள் எல்லா மனிதர்களை விடவும் அல்லாஹ்வுக்கு அதிக நேசத்திற்குரியவர் ஆவார்கள். அவர்கள் மீது அல்லாஹ்வின் இறுதியான, முழுமையான, முழுமை செய்யப்பட்ட ஷரீஅத் இறங்கியது. அவர்களின் போதனை அன்பு, நேசத்திற்கான போதனையாகும்.**

அவர்கள் தம் இறைவனுடன் இருக்கும் தொடர்பின் காரணமாக, தம் மீது இறங்கிய போதனையை உலகில் பரப்புவதற்காகவும், உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான கவலையையும், அதற்காக கடுமையான வேதனையையும் கொண்டிருந்ததன் காரணமாகவும், தமது வாழ்வை இன்னலில் ஆழ்த்திக் கொண்டிருந்தார்கள். எந்த அளவு தமது நிலையை ஆக்கிக் கொண்டிருந்தார்கள் என்றால், எந்த அளவு வேதனையுடன் துடிதுடித்து, அழுது அல்லாஹ்விடம் துஆக்கள் செய்தார்கள் என்றால், அல்லாஹ் {(ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)} அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினான்:

لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ اَلَّا يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ

(திருக்குர்ஆன் (அதிகாரம் அஷ் ஷுஅரா) 26:4)

பொருள்: அவர்கள் நம்பிக்கையாளர்கள் ஆவதில்லை என்பதற்காக நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீர் போலும்.

ஆக, இந்த நபர்தான், மக்கள் தம்மைப் படைத்தவன் பக்கம் திரும்ப வேண்டும்; அழிவில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்; தமது

உலகையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டும்; தமது மறுமையையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உள்ளத்தில் மனித குலத்திற்காக வேதனை கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்தையும் உள்ளடக்கிய எப்படிப்பட்ட போதனையை வழங்கினார்கள் என்றால், வேறு எந்த போதனையும் இத்துடன் போட்டியிட முடியாது. எந்த அளவு அமைதிக்கான உத்தரவாதம் அளித்தார்கள் என்றால், உண்மையில் அது அல்லாஹ்வால் வழங்கப்பட்ட உத்தரவாதம் ஆகும்.

ஆனால், **வருத்தத்திற்குரிய விஷயம் என்னவெனில், முஸ்லிம்களும் இந்தப் போதனையை மறந்து விட்டனர். ஈமானுக்கான நாவளவிலான முழக்கத்தை மட்டும் இட்டுக் கொண்டு ஒருவர் மற்றவரின் இரத்தத்துக்காகத் தாகித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்காக அந்நியர்களிடம் உதவி கோருபவர்களாக இருக்கின்றனர்.** கலிமா கூறுபவர்கள் கலிமா கூறுபவர்களை மார்க்கத்தின் எதிரிகளின் உதவியால் கொலை செய்கின்றனர். இதை விட அதிகம் முஸ்லிம்களின் பேறிழந்த நிலை வேறு என்ன இருக்க முடியும்?

இவ்வளவு அழகான போதனையையும் இந்த அளவு வேதனை கொண்டிருக்கும் ரஸூல் (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்கள் என வாதிட்டும், அல்லாஹ்வின் கோபத்தை விலை கொடுத்து வாங்குகின்றனர். உலகில் அமைதி, சமாதானத்தைப் பரப்புவதற்குப் பகரமாக அமைதியின்மையைப்

பரப்புவது என்ற வகையில் பெயர் போனவர்களாக ஆகிக் கொண்டே செல்கின்றனர்.

இது அனைத்தும் எதனால் நடக்கிறது என்றால், அல்லாஹ் இந்தக் காலத்தில் அமைதி மற்றும் சமாதானத்தின் பேரரசரும், அல்லாஹ்வின் மிகவும் அன்பிற்குரியவருமான அந்த நபரின் ஊழியரை உலகில் அமைதி மற்றும் சமாதானத்தின் போதனையைப் பரப்புவதற்காக அனுப்பினான்.

இவர்கள் அவரது பேச்சைக்கூட கேட்க விரும்புவதில்லை; பேச்சை கேட்க விரும்பாதது மட்டுமல்லாமல், அதையும் கடந்து, அவரையும் அவரை ஏற்றுக் கொள்பவர்களையும், காஃபிர்கள் (நிராகரிப்பாளர்கள்) என்று மார்க்கத் தீர்ப்பு வழங்கக் கூடியவர்களாகவும், அவர்களைக் கொல்வதை இஸ்லாத்திற்கு ஆற்றும் தொண்டாகவும், காத்தமுல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான அன்பிற்கான அளவுகோலாகவும் கருதுகின்றனர்.

அவர்களது பார்வையில், அஹ்மதிகளின் வாழ்க்கையோடு விளையாடுவது நற்கூலியைத் தரும் பணியாகும். எனவே, இப்படிப்பட்ட மக்களால் எப்படி இஸ்லாத்தின் அமைதியான போதனையை உலகத்தில் பரப்ப முடியும்?

**அந்தோ! இந்த மக்கள் புரிந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இந்த ஆலிம்கள் ஒரே உம்மத்தாக மாறி, ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனையை உலகில் பரப்புபவர்களாகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான**

**ஊழியருடன் சேர்ந்து உலகத்துக்கு உண்மையான அமைதி மற்றும் சமாதானத்திற்கான தூதை எட்ட வைக்க இயலும் பொருட்டு, இவர்களின் அறிஞர்கள் தீய அறிஞர்களாவதற்குப் பகரமாக அறிவு மற்றும் மதி நுட்பத்தைப் பரப்புபவர்களாக மாறினால் எவ்வளவு நன்றாக இருக்கும்!!**

எவ்வாறு இருப்பினும் இது ஒரு தனியான, விரிவான கருத்தாகும். **இப்பொழுது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய போதனை, ஹுஸூர் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய ஷரீஅத் மற்றும் அமைதியையும், சமாதானத்தையும் பரப்பக்கூடிய அன்னாருடைய போதனையைச் சான்றாகக் கொண்டு, உலகளாவிய அமைதி பற்றிய சில விஷயங்களைக் கூறுவேன்.**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய போதனை மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியோ எந்த அளவு பரந்த தன்மையைக் கொண்டிருக்கின்றதென்றால், அதை சிறிய நேரத்தில் முழுவதுமாக எடுத்துரைப்பது சாத்தியமே இல்லை. ஆனால், ஏற்கனவே நான் கூறியது போன்று, சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன்.

**நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுப்படுத்துகின்ற, அவமானப்படுத்துகின்ற குற்றத்தைச் செய்கிறோம்; அதைப் போதிக்கிறோம் என்று அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி கூறப்படுகிறது - நவூதுபில்லாஹ்!** ஆனால், உண்மையில், நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் போதனைப்படி செயல்படக் கூடியவர்களாகவும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு செலுத்தக்

கூடியவர்களாகவும் இருக்கிறோம். ஜமாஅத்தின் நூல்கள் இதற்குச் சான்றாகும். இந்தப் போதனையையும் அன்பையும் பார்த்து, ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கான நல்லியல்பு கொண்ட மக்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள்.

இஸ்லாத்தின் இந்தப் போதனையோ எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதும், அன்பு மற்றும் சமாதானத்தைப் பரப்பக் கூடியதுமான போதனை என்றால், இதுவே இன்று உலக அமைதிக்கான ஒரே தீர்வாகும் என அந்நியர்களும் கூறும் கட்டாயத்திற்கு உள்ளாகி விட்டனர்.

இப்பொழுது சில நாள்களுக்கு முன் யூ.கே-வின் ஆண்டு மாநாட்டில் நான் ஜமாஅத்தின் முன்னேற்றம் பற்றிய அறிக்கையிலும், மாநாட்டினால் ஏற்பட்ட தாக்கங்களைப் பற்றிய சம்பவங்களிலும், எவ்வாறு மக்கள் அஹ்மதிய்ய சூழல் மற்றும் மாநாட்டின் சூழலால் தாக்கம் அடைந்தார்கள், எவ்வாறு அவர்களுக்கு இஸ்லாத்தின் அமைதியை விரும்பக்கூடிய போதனைப் பற்றி தெரிய வந்தது என அவர்கள் கூறியதை எடுத்துரைத்தேன்.

எவ்வாறு இருப்பினும், நம்முடைய எதிரிகள் என்ன வேண்டுமானாலும் சிந்திக்கட்டும்; செய்யட்டும்! நம்முடைய வேலை என்னவென்றால், நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது உண்மையான அன்பு இருக்கிறது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனையை நாம் மேற்கொள்ள வேண்டும்; உலகத்தில் பரப்ப வேண்டும்.

இன்று உலகத்தில் அமைதியும், சமாதானமும் ஏற்படுவதற்கு ஒரே தீர்வு இதுதான் என்று உலகிற்கு எடுத்துக் கூற வேண்டும். எனவே, வாருங்கள்! அமைதி மற்றும் சமாதானத்திற்கான போதனையை வழங்கக்கூடிய இந்த மாபெரும் நபருடன் இணைந்து இம்மையிலும், மறுமையிலும் உங்களது அமைதிக்கான ஏற்பாட்டைச் செய்து கொள்ளுங்கள்.

இவை வெறும் பேச்சுகள் மட்டும் அல்ல. மாறாக, நாம் வரலாற்றைப் பார்க்கும்போது, எவ்வாறு இந்த நபி (ஸல்) அவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாகவும், அறிவீனர்களாகவும் இருந்த அரேபியர்களை அறிவீனத்தின் இருள்களில் இருந்து வெளியே கொண்டு வந்து, மிக உயர்வான நல்லொழுக்கம், அறிவு மற்றும் செயல் எனும் கோபுரங்கள் வரை சென்றடைய வைத்து விட்டார்கள் என்பதைப் பார்க்கிறோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘அந்தத் தூதர் (ஸல்) அவர்களே காட்டுமிராண்டிகளை மனிதர்களாக ஆக்கினார்கள். மனிதர்கள் என்ற நிலையிலிருந்து ஒழுக்கமான மனிதர்களாக ஆக்கினார்கள். அதாவது, உண்மையான மற்றும் சரியான நல்லொழுக்கத்தின் தலையாய தன்மையை நீதியில் நிலைநாட்டினார்கள். பிறகு, நல்லொழுக்கமான மனிதர்கள் என்ற நிலையிலிருந்து இறைவனுடன் இருக்கும் மனிதர்கள் எனும் இறை பண்பால் பண்படுத்தினார்கள்.’’ (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 2, பக்கம் 183, அல் இஷ்திஹார் முஸ்தைக்கனன் பிவஹ்யில்லாஹில் கஹ்ஹார். நஸாரத் நஷ்ரோ இஷாஅத் காதியான் 2019 வெளியீடு)

எனவே, ஹுஸூர் (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக்கொண்ட, தம்மை நேசிக்கக்கூடிய மக்களுக்கு நல்லொழுக்கம் மற்றும் இறைவணக்கங்களுக்கான எப்படிப்பட்ட யுத்திகளைக் கற்றுத் தந்தார்கள் என்றால், அவை அந்த மக்களை இறைவனின் நெருக்கத்தைப் பெறக்கூடியவர்களாக ஆக்கிவிட்டன. மேலும், அவர்களின் ஒவ்வொரு சொல்லும், செயலும் இறை திருப்திக்காக ஆகிவிட்டன. அவர்கள் அடியார்களுக்கான உரிமைகளை நிறைவேற்றினர் என்றாலும்கூட, இறைவனின் நெருக்கத்தைப் பெறுவதற்காக நிறைவேற்றினர்.

எனவே, உண்மையான உள்ளத்துடன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது ஒரு மனிதனை எப்படிப்பட்ட இடத்திற்குக் கொண்டு செல்கிறது என்றால், அங்கு அவர் அல்லாஹ்வை உண்மையான முறையில் நேசிக்கக் கூடியவராகி விடுகிறார். பிறகு, இந்த உண்மையான அன்பு, மனிதனின் ஒவ்வொரு சொல்லையும், செயலையும் இறைவனின் திருப்தியைப் பெறக் கூடியதாக ஆக்கி விடுகிறது.

உண்மையான உள்ளத்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவர்களைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: **“உண்மையான உள்ளத்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதும், அன்னார் மீது நேசம் கொள்வதும் இறுதியில் மனிதனை இறைவனுக்குப் பிடித்தமானவனாக ஆக்கி விடுகிறது.”**

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 67)

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களின் உள்ளங்களில் ஏற்படுத்தியது இந்தப் புரட்சியைத்தான். அதன் மூலம் இணைவைப்பவர்களாக இருந்தவர்கள் ஓரிறைக் கொள்கை உடையவர்களாக ஆனார்கள். மேலும், இறைவனுக்குப் பிடித்தமானவர்களாக ஆகிவிடும் அளவிற்கு அத்தகைய ஓரிறைக் கொள்கையை உடையவர்களாக ஆனார்கள். அவர்கள் இறைவனை நேசிக்கக் கூடியவர்களாக ஆகி விட்டார்கள்; இறைவன் அவர்களை நேசிக்கக் கூடியவனாக ஆகிவிட்டான்.

அல்லாஹ்வை நேசிக்கக் கூடியவர்கள் இறை வணக்கத்திற்கான உரிமையையும் நிறைவேற்றினர்; அதுவும் மிக நன்றாக நிறைவேற்றினர். அல்லாஹ்வால் வழங்கப்பட்ட போதனையின் படி செயல்படத் துவங்கினர்; அதுவும் மிக நன்றாக செயல்பட்டனர். அதற்கான தகுதியை நிலை நாட்டினர்.

**ஒருவர் மீது அன்பு ஏற்படும் போது, பிறகு அவருடைய ஒவ்வொரு சொல் மற்றும் செயலின்படி மனிதன் செயல்பட முயற்சி செய்கிறான். அவருடைய ஒவ்வொரு பேச்சைக் கேட்பதற்கும், அதை ஏற்பதற்கும் முயற்சி செய்கிறான்.**

நாவளவிலான அன்பு பற்றிய வாதம் செய்வதில்லை. எனவே, அந்த மக்களிடம் இறைவன் மீதான நேசம் உருவான போது, இறைவனுடைய படைப்பினங்களுக்கு செலுத்த வேண்டிய உரிமையை நிறைவேற்றுவதன் பக்கமும் கவனம் ஏற்பட்டது. அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை

நிறைவேற்றுவதிலும் ஒருவர் மற்றவரை முந்திச் செல்வதற்கான முயற்சி செய்யக் கூடியவர்களாக மாறத் துவங்கி விட்டார்கள்.

இந்த சூழ்நிலை உருவாகும் போது, ஒருவர் மற்றவரிடம் கொள்ளும் அன்பும், நேசமும் அல்லாஹ்வுக்காக ஏற்படுகிறது. மற்றவர்களுக்கான உரிமையையும் இறை திருப்தியைப் பெற வேண்டும் என்பதற்காக மனிதன் நிறைவேற்றுகிறான். இந்தத் தகுதி உருவாகிவிடும்போது, பிறகு, அமைதி மற்றும் சமாதானத்திற்கான அடித்தளமும் ஏற்படுகிறது. இதற்காக முயற்சி செய்யப்படுகிறது. இதற்கான தகுதி நிலைபெற்று விடுகிறது.

**எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு இறைவனை சந்திப்பதற்கான வழிகளைக் காட்டிய மாமனிதர் ஆவார்கள். மேலும், இம்மாமனிதர் மீது இறங்கிய போதனைப்படி செயல்பட்டால் மட்டுமே நம்மால் உலகத்தில் அமைதி மற்றும் சமாதானத்தை உருவாக்க முடியும்.**

அமைதிக்கான அடித்தளம் வீடுகளில் இருந்து துவங்குகிறது என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும். பிறகு, வட்டாரங்கள், சிற்றூர்கள், நகரங்கள், நாடுகள் மற்றும் சர்வதேச அளவில் என அதன் வட்டம் விரிவடைந்து விடுகிறது. எனவே, **ஒவ்வொரு மட்டத்திலும் ஒருவர் மற்றவரின் உணர்வுகளை, உரிமைகளைக் கருத்தில் கொள்ளும் பொழுது அமைதி உருவாகிறது. ஒவ்வொரு மட்டத்திற்குமான இந்தப் போதனையையே அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நமக்கு வழங்கினான். ஹுஸூர் (ஸல்)**

**அவர்கள் ஒவ்வொரு மட்டத்திற்கும் இந்தப் போதனையை வழங்கினார்கள்.**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இந்தத் தலைப்பைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்து வந்தார்கள். ஒரு சந்தர்ப்பத்தில், **"ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் உலகத்தின் அமைதியும்"** என்ற இந்தத் தலைப்பை எடுத்துரைத்தார்கள். ஹுஸூர் (ரலி) அவர்களின் அந்தக் கட்டுரையில் இருந்து பயனடைந்தவாறும், பலன் பெற்றவாறும் நானும் இது தொடர்பாக சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன்.

அமைதி மிக முக்கியமான விஷயமாகும் என்பதை நாம் பார்க்கிறோம்; புரிகிறோம். அமைதி பற்றி பேசப்படுகிறது. அமைதி மிக முக்கியமான விஷயம் ஆகும்; அமைதி எனும் நிலையே வீட்டின் நிம்மதிக்கும், சமாதானத்திற்குமான உத்தரவாதம் ஆகும்; உலகளாவிய அளவிலும் நிம்மதிக்கும், சமாதானத்திற்குமான உத்தரவாதம் ஆகும் என்று ஒவ்வோருவரும் கூறுகிறார்.

ஒவ்வொரு மட்டத்திலும் அமைதி நிலவ வேண்டும் என்று ஆசையும் கொள்கின்றனர். ஆனால், **ஆசை மட்டுமே அமைதியை நிலைநாட்டி விடுவதில்லை. ஏனென்றால், இங்கும் அமைதியை விரும்புதல் தன்னலத்தைக் கொண்டதாக இருக்கிறது. இதைத் தான் நாம் உலகத்தில் பார்க்கிறோம்.**

தன்னலம் இல்லையென்றால், சண்டைகள் நடைபெறவே முடியாது. பொதுவாக ஒருவர் அமைதியைப் பற்றி பேசும் போது, அமைதியைப் பற்றிய ஆசை தனக்காக இருக்கிறது.

இன்னும் சொல்வதாயின், பொதுவாக மனிதன் துஆ செய்யும் போதும், துஆ செய்யாமல் இருக்கும் போதும், ஒரு மனிதன் அல்லாஹ் என்னையும், என் மனைவி மக்களையும், என் உறவினர்களையும் அமைதியில் வைத்திருப்பானாக என்பதைத்தான் கூறுகிறான். சிலவேளை (இந்த) ஆசையை வெளிப்படுத்துதல் நாவிலும் வந்து விடுகிறது.

மற்றவர்கள் அமைதியில் இருப்பதற்காக இந்த வேதனையிருப்பதில்லை. அல்லது தனது வாழ்வை நிம்மதியாக கழிப்பதற்காக மனிதன் செல்வத்தை விரும்புகிறான்; அதை நல்லதாகக் கருதுகிறான் என்றால், அவன் எதிரிக்காகவும் செல்வத்தை நல்லதாகக் கருதுகிறான் என்பது அதற்குப் பொருள் அல்ல. மாறாக, தனக்காக மட்டுமே செல்வத்தை நல்லதாகக் கருதுகிறான்.

உடல் நலத்தை நல்லதாகக் கருதுகிறான் என்றால், எதிரிக்காகவும் நல்ல உடல் நலத்தை விரும்புகிறான் என்பது அதற்குப் பொருளல்ல. எதிரிக்காகவோ, தான் அவனை விட மேலோங்கி இருக்க வேண்டும் என்பதற்காக, (எதிரியாகிய) அவன் ஆதரவற்றவனாக இருக்க வேண்டும்; பலவீனமானவனாக இருக்க வேண்டும் என்றே விரும்புவான்.

இவ்வாறே மக்கள் கண்ணியத்தையும், அந்தஸ்தையும் விரும்புகின்றனர் என்றால், தமக்காக மட்டுமே விரும்புகின்றனர்; ஒவ்வொருவருக்காகவும் விரும்புவதில்லை. எனக்குக் கிடைக்கும் அந்தஸ்தும், கண்ணியமுமே மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று ஒருபோதும் விரும்ப மாட்டார்கள்.

உலகில் பொது மக்களிடம், தலைவர்களிடம் இந்தக் காட்சிகளே நமக்குத் தென்படுகின்றன. அரசியல் வாதிகளின் ஒருவர் மற்றவருடனான சண்டைகள் மற்றும் அதிகாரத்திற்கு வந்த பிறகு ஒருவர் மற்றவர்மீது அநீதியிழைப்பது ஆகியவற்றை நம்முடைய நாடுகளிலேயே நாம் பார்க்கிறோம். ஒருவர் மற்றவர் மீது அநீதியிழைப்பது இந்த சிந்தனையின் விளைவாகவே இருக்கிறது.

எனவே, அமைதிக்கான ஆசை மட்டும் இருந்தால், அது குழப்பத்திற்கு வழிவகுக்கலாம். ஏனெனில், அதில் தன்னலம் கலந்திருக்கிறது. எந்த மக்கள் அமைதியை விரும்புகின்றனரோ, அவர்கள் தமக்கு, தமக்கு நெருக்கமானவர்களுக்கு அல்லது தமது சமுதாயத்திற்கு மட்டும் அமைதி கிடைக்க வேண்டும் என்ற விதத்திலேயே அமைதிக்காக ஆசை கொள்கின்றனர்.

அது அல்லாமல், மற்றவர்களுக்காகவும் எதிரிகளுக்காகவும், அவர்களுடைய அமைதியை அழிக்க வேண்டும் என்பதைத்தான் இவர்கள் விரும்புகின்றனர். எனவே, தனக்கென ஓர் அளவுகோல்; மற்றவர்களுக்கென வேறு அளவுகோல் என்ற கோட்பாட்டை வழக்கில் கொண்டு வந்தால், உலகத்தில் எந்த அமைதி உருவானாலும், அது சில மக்களுக்கான அமைதியாக இருக்குமே அன்றி, முழு உலகிற்கான அமைதியாக இருக்காது.

முழு உலகிற்கான அமைதி இல்லை என்றால், **அதை உண்மையான அமைதி என்று கூற முடியாது. தனது சொந்த, குடும்ப, தலைமுறை சார்ந்த, சமுதாய, மற்றும் நாட்டின் முன்னுரிமைகளுக்கு**

**எல்லாம் அப்பாற்பட்டு, (அமைதியை) நிலைநாட்ட முயற்சி செய்யும் போதும், ஒரே மையப் புள்ளியை அடைவதற்கு முயற்சி செய்யும் போதும்தான் உண்மையான அமைதி ஏற்படும்.**

**எனக்கு மேல் உயர்ந்தவன் ஒருவன் இருக்கின்றான்; அவன் எனக்காக மட்டுமே அமைதியை விரும்புதில்லை; மாறாக, முழு உலகிற்காகவும் அமைதியை விரும்புகிறான்.** அவன் என் வீடு, என் நாட்டிற்காக மட்டுமே அமைதியை விரும்புவதில்லை. அதையும் கடந்து, அனைத்து நாடுகளுக்காகவும் அமைதியை விரும்புகிறான் **என்ற (இவ்)விஷயத்தை ஒரு மனிதன் புரிந்து கொள்ளும் போதும், அந்த அறிவையும் அதற்கான புரிதலையும் உருவாக்கிக் கொள்ளும் போதுதான் இது நடக்க முடியும்.**

எனவே, எல்லாருக்கும் மேலான ஒருவன் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அவனுக்காக நான் எனது சொல்லையும், செயலையும் ஒன்றாக்க வேண்டும் என்ற உணர்வே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அளித்த அமைதிக்கான போதனையின் மையப்புள்ளி ஆகும். எப்பொழுதும் **இந்த அடிப்படை விதிப்படி செயல்படுவதற்காக, தனக்காக விரும்புவதையே மற்றவர்களுக்காக விரும்புங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ள பொன்னான கோட்பாட்டை நாம் முன்வைக்க வேண்டியது வரும்.**

எனவே, இந்தக் கோட்பாட்டை முன்னால் வைத்தவாறு, நான் எனக்காக அல்லது எனது சமுதாயத்திற்காக அல்லது எனது நாட்டிற்காக

மட்டும் அமைதிக்கான ஆசை கொண்டவனாக இருக்கிறேன் என்றால், அந்நிலையில் அல்லாஹ்வின் உதவி, அவனது ஆதரவு மற்றும் அவனுடைய திருப்தி எனக்கு ஒருபோதும் கிடைக்க முடியாது என்ற சிந்தனையை நாம் எப்பொழுதும் மேற்கொள்ள வேண்டியது வரும்.

**அல்லாஹ்வுக்காக எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற கொள்கையில் மனிதன் நிலை நிற்கும்போதுதான் உண்மையான அமைதி நிலைபெற முடியும். இல்லை என்றால், நிலைபெற முடியாது.**

எனவே, அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக நமக்கு இவ்வாறு கூறியுள்ளான்:

اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ الْمُؤْمِنُ

(திருக்குர்ஆன் (அதிகாரம்: அல் ஹஷ்ர்) 59:24)

அவன் அரசனாக இருக்கிறான். தூயவனாக இருக்கிறான். மற்றவர்களைத் தூய்மைப்படுத்துகிறான். தான் எல்லாக் குறைகளை விட்டும் பாதுகாப்பாக இருப்பவன் ஆவான். மற்றவர்களையும் பாதுகாத்து வைப்பவன் ஆவான். எல்லாருக்கும் அமைதியை வழங்கக்கூடியவன் ஆவான்.

اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ الْمُؤْمِنُ

என்று கூறி மனிதனுடைய எண்ணங்களைத் தூய்மை ஆக்கி விட்டான். எண்ணங்கள் சீராகாத வரை பணியும் சீரடைய முடியாது என்பது உறுதியான விஷயமாகும். நிய்யத்தே (எண்ணமே) சரியாக இல்லாத போது, பிறகு எவ்வாறு பணியில்

பரக்கத் (அருள்) ஏற்பட முடியும்? எண்ணங்கள் சரியாகாதவரை, பணிகள் ஒருபோதும் சரியாக முடியாது; சரியாகவே முடியாது என்பதை எந்நிலையிலும் நினைவில் கொள்ள வேண்டும்.

**உலகில் இப்பொழுது எத்தனைப் போர்களும் குழப்பங்களும் நடைபெறுகின்றனவோ அவை அனைத்தும் மனிதர்களுடைய எண்ணங்கள் தூய்மையாக இல்லை என்பதனாலேயே நடை பெறுகின்றன.**

மக்கள் நாவால் எவற்றைக் கூறுகிறார்களோ அவற்றிற்கு ஏற்ப அவர்களுடைய ஆசைகள் இல்லை. அவர்களுடைய ஆசைகளுக்கு ஏற்ப அவர்களுடைய சொல்லும், செயலும் இல்லை. உலகத்தின் இந்தக் குழப்பத்தில் பெரிய மற்றும் முன்னேற்றமடைந்த நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளின் பங்கு அதிகமாக இருக்கிறது. சந்தேகமின்றி, உலகம் இன்று போரைத் தீயது என்று கூறுகிறது. ஒவ்வொரு தலைவரும் போர் தீயது என்றுதான் கூறுகிறார்.

ஆனால், அதற்குப் பொருள், எங்களுக்கு எதிராக யாராவது போர் புரிந்தால் அது தீய விஷயம் என்பது மட்டுமே ஆகும். ஆனால், அவர்களிடமிருந்து போர் துவங்கினால் அது ஒன்றும் தீமையல்ல. அமைதியானவனும், அமைதியை வழங்குபவனுமான அ(ந்த இறை)வன் மீது இவர்களின் பார்வை இல்லை என்பதால் இந்தக் குறைபாடு ஏற்பட்டுள்ளது.

நமக்குப் பலனிருக்கும் வரை அமைதிக்கான முழக்கமிடுவதை நாம் செயல்படுத்துவோம். ஆனால்,

நமது பலனுக்கு எதிராக விஷயம் வந்தால், நாம் நிராகரித்து விடுவோம். நம்முடைய எதிரிகளுக்கு யாராவது உதவினால், அவர்களுக்கு ஆயுதம் வழங்கினால் அது எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆனால், நாம் யாருக்காவது ஆயுதம் கொடுத்தால், அது அநீதி இழைப்பதற்காகப் பயன்பட்டாலும் அது ஆகுமானதாகும் என்று அவர்கள் நினைக்கின்றனர்.

இந்த சிந்தனை இருந்தால், எப்படி உண்மையான அமைதி நிலைபெற முடியும்? **எனவே, உலகிற்கு ஓர் இறைவன் இருக்கிறான். அவன் மக்கள் அனைவரும் அமைதியில் இருக்க வேண்டும் என விரும்புகிறான் என்ற கொள்கையும், அதன் படி செயல்படுவதுமே உலகில் உண்மையான அமைதியை ஏற்படுத்த உதவும்.**

இந்தக் கொள்கை இருக்கும் போதும், இதன்படி செயல்படும் போதும்தான் மனிதனுடைய ஆசைகள் தன்னலத்திற்கு அப்பாற்பட்டவையாக இருக்கும். இன்னும் கூறுவதாயின், உலகிற்குப் பொதுவான பலனைச் சென்றடைய வைக்கக் கூடியவையாக இருக்கும். இது நடக்கும் பொழுது, நம்முடைய சிந்தனைகளின் தகுதியும், அமைதி மற்றும் சமாதானத்தை உருவாக்குவதற்கான தகுதியும் வேறொரு வகையில் இருக்கும்.

இன்ன விஷயத்தால் நமக்குப் பலன் ஏற்படுகிறதா, இல்லையா என்பதை நாம் பார்க்க மாட்டோம். மாறாக, நாம் முழு உலகத்தின் மீது இதன் தாக்கம் என்ன இருக்கிறது என்பதைப் பார்ப்போம். உலகவாதிகளோ எப்பொழுதும் தமது

பலனுக்காக பிறரின் அமைதியை சீர்குலைத்துக் கொண்டே இருக்கின்றனர்.

ஆனால், உயர்ந்த ஒருவன் இருக்கிறான் என்ற கொள்கையை உடையவர்கள் ஒருபோதும் (இவ்வாறு செய்யத்) துணிய மாட்டார்கள். ஏனென்றால், நாம் இப்படிச் செய்தால், நமக்கு மேல் இருக்கக்கூடிய ஒருவன் நம்மை நசுக்கி வைத்து விடுவான் என்பது அவர்களுக்குத் தெரியும்.

சுருக்கமாகக் கூறினால், **நமக்கு மேல் ஒருவன் இருக்கிறான் என்பதை ஏற்றுக் கொள்ளாத வரை,** அவன் மீதான நேசம் உள்ளத்தில் உருவாகாத வரை **உண்மையான அமைதி நிலை பெற முடியாது. அல்லாஹ் அமைதியை வழங்கக்கூடியவன் என்ற கொள்கையை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாக இஸ்லாம் மட்டுமே முன் வைத்துள்ளது.**

அல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறக்கிய போதனையில் இவ்வாறு கூறுகிறான்:

قَدْ جَآءَكُمْ مِّنَ اللّٰهِ نُوْرٌ وَّكِتٰبٌ مُّبِيْنٌ ﴿۱۶﴾

يَّهْدِىْ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضْوَانَهٗ سُبُلَ السَّلٰمِ

(திருக்குர்ஆன் (அதிகாரம்: அல் மாயிதா) 5:16,17)

நிச்சயமாக! உம்மிடம் அல்லாஹ்விடமிருந்து ஓர் ஒளியும், ஒளி பொருந்திய ஒரு மறைநூலும் வந்து விட்டது. இதன் மூலமாக, அல்லாஹ் தன் விருப்பத்தைப் பின்பற்றுபவர்களுக்கு அமைதிக்கான வழிகளின் பக்கம் நேர்வழி வழங்குகிறான்.

எனவே, அல்லாஹ்வோ நேர்வழிக்கான ஒளியை அனுப்பி விட்டான். எல்லாக் கட்டளைகளையும் உள்ளடக்கிய ஒரு மறைநூலையும் அனுப்பி விட்டான். அதில் அமைதிக்கான வழிகளை நோக்கி தெளிவான வழிகாட்டல்களையும் விளக்கிக் கூறிவிட்டான்.

இப்பொழுது எவர்கள் இதை முழுமையாகப் பின்பற்றுவார்களோ, அவர்களே அமைதிக்கான வழிகளை அடைபவர்களாக இருப்பார்கள். இன்று முஸ்லிம்களிடையே கூச்சல், குழப்ப நிலைமை இருக்கிறது; ஒருவர் மற்றவருடன் போர்கள் செய்யும் நிலைமை இருக்கிறது என்றால், இவர்கள் அல்லாஹ்வால் வழங்கப்பட்டுள்ள, அனுப்பப் பட்டுள்ள மறையையும், ஒளியையும் உண்மையாகப் பின்பற்றுவதில்லை என்பது தெளிவாகிறது.

சந்தேகமின்றி, இவர்கள், நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிக்கிறோம் என்று வாதம் புரிகின்றனர். ஆனால், செயல் அதற்கு மாற்றமாக உள்ளது. அல்லாஹ்வின் கூற்று ஒருபோதும் தவறாக ஆக முடியாது. அல்லாஹ்வின் விஷயம் ஒருபோதும் தவறாக முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கூற்றுகள் ஒருபோதும் தவறானவையாக ஆக முடியாது.

**முஸ்லிம்கள் இந்தத் தெளிவான மறையை ஏற்றுக்கொள்வதாக வாதம் புரிகின்றனர்தான்; ஆனால் அவர்கள், அல்லாஹ் இதில் வழங்கியுள்ள போதனையைப் பின்பற்றுவதில்லை.**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு செலுத்துவதாக வாதம் புரிகின்றனர்தான்;**

**ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி மற்றும் போதனைப்படி இவர்கள் செயல்படுவதில்லை. இதனால்தான் முஸ்லிம்களிடம் சோதனையும் குழப்பமும் இருக்கிறது என்பது தெளிவான விஷயம்.**

எனவே, இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான ஊழியரை ஏற்றுக்கொள்ளும் மக்களின் பணி என்னவெனில், அவர்கள் இந்தப் போதனையைத் தமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்; திருக்குர்ஆனின் போதனைப்படி செயல்பட வேண்டும்; அப்போதுதான் உங்களால் உங்களுடைய சுற்றுப்புறத்தில் அமைதியை உருவாக்க முடியும். உலகத்திற்கும் அமைதிக்கான தூதுச் செய்தியை சென்றடைய வைக்க முடியும். இல்லையெனில், முதலில் உங்களுடைய சொல்லையும், செயலையும் ஒன்றாக்குங்கள்; (அதற்குப்) பிறகு, எங்களுக்கு அறிவுரை கூறுங்கள் என்று உலகம் கூறும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

**"**இப்பொழுது வானத்தின் கீழ் ஒரேயொரு தூதர்தான் இருக்கிறார்கள்; ஒரேயொரு மறைதான் இருக்கிறது. அதாவது, ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னார் நபிமார்கள் அனைவரையும் விட மிக உயர்ந்தவரும் மிக மேலானவரும் ஆவார்கள். தூதர்கள் அனைவரையும் விட நிறைவு பெற்றவரும், மிக்க முழுமைப் பெற்றவரும் ஆவார்கள். நபிமார்களின் முத்திரையும், மாந்தர்களில் சிறந்தவரும் ஆவார்கள்.

அன்னாரைப் பின்பற்றுவதனால் இறைவன் கிடைக்கிறான். இருளின் திரைகள் விலகுகின்றன. இந்த உலகத்திலேயே உண்மையான ஈடேற்றத்தின் அடையாளங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

திருக்குர்ஆன் உண்மையான, முழுமையான நேர்வழிகளையும், தாக்கங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. அதன் மூலம், உண்மையான அறிவுகளும் இறை ஞானங்களும் கிடைக்கப் பெறுகின்றன. மேலும், மனித அசுத்தங்களிலிருந்து உள்ளம் தூய்மை அடைகிறது. மனிதன் அறிவீனம், கவனமின்மை மற்றும் ஐயங்கள் எனும் திரைகளை விட்டும் ஈடேற்றம் அடைந்து, உண்மையான உறுதிநம்பிக்கை எனும் தகுதி வரை சென்றடைந்து விடுகிறான்.'' (பராஹீனே அஹ்மதிய்யா, ரூஹானி கஸாயின் தொகுதி 1, பக்கம் 557 - 558 அடிக்குறிப்பின் கீழ் அடிக்குறிப்பு)

**எனவே, அல்லாஹ் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனும் தன் ஒளியை அனுப்பி; அறிவுகள், இறைஞானங்கள் அனைத்தின் தலையூற்றும், நேர்வழியின் ஒளியும், அமைதியின் தூதுச் செய்தியுமான திருக்குர்ஆன் எனும் (தன்) ஒளிமிக்க மறையையும் அனுப்பி மனித குலத்தின் மீது மிகப் பெரும் அருள் புரிந்திருக்கிறான்.**

**இதிலிருந்து மனிதன் பலன் பெறவில்லை என்றால், அழித்து விடக்கூடிய தன்னுடைய தன்னலத்தின் ஆதாயங்களுக்கே சிறையில் அடைபட்டவனாக இருந்தால், இதை விடப் பெரிய பேறிழந்த நிலை வேறு என்ன இருக்க முடியும்?**

எனவே, இம்மையையும், மறுமையையும் சீர்படுத்த வேண்டும் என்றால், அமைதியாகவும்,

நிம்மதியாகவும் வாழ வேண்டும் என்றால், நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய அல்லாஹ்வின் இந்தக் கூற்றை எப்பொழுதும் நம் முன் வைக்க வேண்டும்:

يَّهْدِىْ بِهِ اللّٰهُ مَنِ اتَّبَعَ رِضْوَانَهٗ سُبُلَ السَّلٰمِ

(பொருள்: அவனது விருப்பத்தைத் தேடுகின்றவர்களை அல்லாஹ் இதன் மூலம் சமாதான வழிகளில் நடத்துகிறான்)

(திருக்குர்ஆன் (அதிகாரம்: அல் மாயிதா) 5:17)

இந்த ஒளிமிக்க மறைநூலின் நேர்வழியை எப்பொழுதும் உங்கள் முன் வையுங்கள். இந்த ஒளிமிக்க மறைநூலின் நேர்வழியைப் படிக்க வேண்டும்; கண்முன் வைக்க வேண்டும். அப்போதுதான் ஸுபுலஸ் ஸலாமில், அதாவது, அமைதியின் வழிகளில் செல்லக் கூடியவர்களாக இருப்பீர்கள்.

இந்த மறைநூலின் எந்த ஒரு கட்டளையும் மனித அமைதியை சீர்குலைக்கக் கூடியதல்ல. எனவே, **இந்தத் தூதுச் செய்தியை நம்மவர்களுக்கும், அந்நியர்களுக்கும் வழங்குவது இன்று நமது பணியாகும். இதுவே உலக அமைதிக்கு உத்தரவாதம் ஆகும்.**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்தப் புரட்சியையே தம் சஹாபிகளிடம் உருவாக்கினார்கள். செயல் அளவில் எப்படிப்பட்ட ஒரு ஜமாஅத்தை ஆயத்தமாக்கி விட்டார்கள் என்றால், அவர்களை

اِذَا خَاطَبَهُمُ الْجٰهِلُوْنَ قَالُوْا سَلٰمًا

(திருக்குர்ஆன் (அதிகாரம் அல் ஃபுர்கான்) 25:64)

பொருள்: ‘அறிவீனர்கள் அவர்களோடு பேசும் போது (அவர்கள்) உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும் என்று கூறுகிறார்கள்’ எனும் வசனத்திற்கு உரியவர்களாக ஆக்கி விட்டார்கள்.

இந்த நிலையே நம்மிடம் உருவாகி விட்டால், நாம் உலகத்தில் உருவாக்கி விட்டால், பிறகு நமது நிகழ்காலமும் அமைதி நிறைந்ததாக ஆகி விடும். நமது எதிர்காலமும் அமைதி நிறைந்ததாக ஆகி விடும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இது ஒரு மிகப் பெரிய பணி ஆகும். அவர்கள் தம்முடைய வீடுகளிலும், தமது சுற்றுச்சூழலிலும் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க வேண்டும். உலகிலும் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க வேண்டும்.**

நம்முடைய உள்ளங்களும் கலப்பற்ற ஓரிறைக் கொள்கையால் நிறைந்திருக்கும் போதுதான், உலகத்தையும் நாம் உண்மையான ஓரிறைக் கொள்கையின் பால் கொண்டு வரும் போதுதான் இந்தப் பணி நடைபெறும்.

**முழுமையான ஓரிறைக் கொள்கையை நிலைநாட்டாமல் அமைதி நிலைபெறவே முடியாது என்பது உறுதியான விஷயம் ஆகும்.**

எல்லாருக்கும் மேல் ஒருவன் இருக்கிறான் என்பதை எந்நிலையிலும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்பது முன்னரும் கூறப்பட்டு விட்டது. அந்த மேலானவன் அல்லாஹ் ஆவான். ஓரிறைக் கொள்கையை உள்ளத்தில் நிலைநாட்டாமல் அந்த சிந்தனை ஏற்பட முடியாது. ஓரிறைக் கொள்கை உருவாகாத போது, போர்களும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

உண்மையான சகோதரத்துவம் ஏற்படும் போதுதான், ஒருவர் மற்றவருடன் அன்பு நேசம் உருவாகும் போதுதான், சகோதரத்துவமான சூழல் உருவாகும் போதுதான் போர்கள் நிற்க முடியும்.

**மக்களிடம் உண்மையான சகோதரத்துவம் உருவாகாத வரை அமைதி நிலைபெறவே முடியாது. மேலும், ஓரிறைவனை ஏற்காமல் உண்மையான சகோதரத்துவம் உருவாக முடியாது.**

ஏகனும் தனித்தவனுமான இறைவனோடு தொடர்பு கொள்ளாமல் உருவாகவே முடியாது. ஏற்றுக் கொள்வது மட்டுமல்லாமல், அவனோடு ஒரு தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது வரும். மேலும், அவனுடைய போதனைகளும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாகவே நமக்குக் கிடைத்திருக்கிறது. அதன்படி, அல்லாஹ் நமக்கு اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ என்ற போதனையைத் திருக்குர்ஆனில் வழங்கினான் என்றால், முஸ்லிம்களிடம் சகோதரத்துவத்திற்கான விரிவான சிந்தனை நிலைபெற வேண்டும்

என்பதற்காக, அதை ஒவ்வொரு தொழுகையிலும் ஓத வேண்டும் எனக் கட்டளையும் இட்டான்.

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ என்ற வசனத்தை ஓதி, இறைவனின் ரப் எனும் (படைத்துப் பரிபாலிக்கும்) பண்பு முழு உலகிலும் விசாலமாக இருக்கிறது என்ற புரிதல் உருவாகிறது. இந்த சொற்களைப் படித்து மனிதனின் சிந்தனை விரிவடைகிறது. மேலும், அவன் எல்லா உலகங்களையும் அண்ட சராசரங்களையும் படைத்துப் பரிபாலிக்கும் அந்த இறைவனைப் புகழ்கிறான். அ(ந்த இறை)வன் கிறிஸ்தவர்களையும் படைத்துப் பரிபாலிப்பவனாக இருக்கிறான். இந்துக்களையும் படைத்துப் பரிபாலிப்பவனாக இருக்கிறான். யூதர்களையும் படைத்துப் பரிபாலிப்பவனாக இருக்கிறான். ஒவ்வொருவரையும் படைத்துப் பரிபாலிப்பவனாக இருக்கிறான். இந்தச் சொற்களை ஒரு மனிதன் ஓதும் போது, பிறகு, அவன் எப்படி பிறரை வெறுக்க முடியும்?

இந்த விஷயத்தையே ஒருமுறை நான் அமெரிக்காவில் அந்நியர்களின் ஒரு அவையில் எடுத்துக் கூறினேன். அதைக் கேட்ட அவர்கள், இது எப்படிப்பட்ட போதனையாக உள்ளது என்று (வியந்து) கூறினார்கள்.

உண்மையிலேயே, இஸ்லாத்தின் போதனை எத்தகையது என்றால், அது ஒருபோதும் ஓர் உண்மையான முஸ்லிமின் உள்ளத்தில் மற்றவர்களுக்காக வெறுப்பையும் குரோதத்தையும் உருவாக்கவே முடியாது.

رَبِّ الْعٰلَمِيْنَ என்ற சொற்களோ அனைத்தையும் உள்ளடக்கியுள்ளன. இந்த விஷயமே அமைதியைப் பரப்புவதற்கு மிகவும் பெரிய, விசாலமான வழியைத் திறக்கிறது. اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ என்ற வசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்தாவது, **உண்மையான ஓரிறைக் கொள்கை நிலைபெற்று விட்டால், எல்லா உலகங்களின் இறைவனைப் புகழ்வதில் மனிதனின் நாவு ஈரமானதாக இருந்தால், பிறகு, எந்தவொரு சமுதாயத்தின் மீதான குரோதமும் மனிதனின் உள்ளத்தில் இருப்பது சாத்தியமே இல்லை. யூதர்களுக்காகவும் இருக்காது; இந்துக்களுக்காகவும் இருக்காது; கிறிஸ்தவர்களுக்காகவும் இருக்காது.**

ஒருபுறம் அவன் அவர்கள் அழிய வேண்டும் என்று ஆசையும் கொண்டு, மறுபுறம் அவர்களைப் பார்த்து அல்லாஹ்வைப் புகழ்வதும் அவனைத் துதிபாடுவதும் எப்படி முடியும்?

இது நடக்கவே முடியாது. எனவே, உண்மையான ஓரிறைக் கொள்கை உடையவரே உண்மையான அமைதி மற்றும் சமாதானத்தின் கொடியைத் தூக்கி நிறுத்துபவர் ஆவார். உண்மையில், முஸ்லிம்கள் இந்த நுண்ணிய கருத்தைப் புரிந்து கொண்டால், இதற்கேற்ப தம் வாழ்வை அமைத்துக் கொண்டால், பிறகு, உலகத்தில் உண்மையான அமைதியை விரும்புபவர்களாக இவர்களே இருப்பார்கள். ஆனால், பிறகும் அதே விஷயம்தான் இருக்கிறது. அதாவது, இதற்காக அவர்கள் **ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்)**

**அவர்களின் உண்மை ஊழியருடன் இணைவதும் அவசியமாகும். அப்பொழுதுதான் அறிவு மற்றும் இறைஞானத்தின் சரியான புரிதலும் கிடைக்க முடியும்.**

ஆனால், அத்துடன் நான் இந்த விஷயத்தை மீண்டும் கூறுவேன். அதாவது, நாம் நம் நிலையை ஆய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும் என்ற பொறுப்பையும் இது நம் மீது சுமத்துகிறது.

நம்முடைய தொழுகைகளில் اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ என்று நாம் ஓதுவது வெறும் வாய்ச் சொற்களாக இருந்து, உள்ளம் அதன் ஆழத்திற்கு செல்லாததாக இருக்கக் கூடாது.

உள்ளமும் சிந்தனையும் இந்த ஆழத்தை விட்டும் வெற்றிடமாக இருக்கிறது என்றால், பிறகு, நாமும் கூச்சல், குழப்பத்தை உருவாக்கக் கூடிய மக்களைச் சேர்ந்தவர்கள் ஆகி விடுவோம். அமைதி மற்றும் சமாதானத்தைப் பரப்பக் கூடியவர்களாகவும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த போதனைகளைப் பின்பற்றக் கூடியவர்களைச் சேர்ந்தவர்களாகவும் இருக்க மாட்டோம்.

எனவே, (இது) மிகவும் சிந்திக்க வேண்டிய இடமாகும். மிகவும் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. மிகவும் கவலைப்பட வேண்டிய இடமாகும். உண்மையான அமைதியையும் சமாதானத்தையும் உலகத்தில் ஏற்படுத்துவதற்காக ஓரிறைவன் மீதான தனது ஈமானை உறுதியாக்க வேண்டியது இன்று ஒவ்வோர் அஹ்மதியின் பணியாகும்.

இறைவன் மீதான அன்பை, வேறு எந்த ஒன்றின் மீதான அன்பும் அந்த இடத்தைப் பறித்துக் கொள்ளாத அளவுக்குத் தன் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். அவனுடைய கட்டளைகளின்படி செயல்படுவதற்காக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய போதனையை, அதாவது, திருக்குர்ஆனைத் தனது வாழ்வின் அங்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

திருக்குர்ஆனின் ஒவ்வொரு கட்டளையும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு வழிகாட்டலும் நம்முடைய சொல் மற்றும் செயலின் அங்கமாக ஆகும் அளவுக்கு நம்முடைய தகுதி சென்றடைந்து விடும் போதுதான், நம்மால் உலகிற்கு இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியைச் சென்றடைய வைக்க முடியும்.

அவர்களுக்கு உண்மையான அமைதிக்கான உத்தியின் போதனையை நாம் முன்னால் எடுத்து வைத்துக் காட்டுவது மட்டுமல்லாமல், அதையும் கடந்து, நம்முடைய செயல்களாலும் கற்றுக் கொடுப்போம். இதுவே உலகத்தில் உண்மையான அமைதியை நிலைநாட்டுவதற்கான வழியாகும். இதுவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உலகளாவிய அமைதிக்கான மாமனிதராக நிரூபிப்பதற்கான வழியாகும். இதுவே இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யக்கூடியவர்களின் வாயை அடைப்பதற்கான வழியாகும்.

எவ்வாறு இருப்பினும், **இன்று இந்தப் பணி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

**நாமும் வீட்டின் மட்டத்திலிருந்து சர்வதேச அளவு வரை இதற்கு ஏற்ப நமது பங்களிப்பை நிறைவேற்றவில்லை என்றால், நாமும் அமைதி மற்றும் சமாதானத்தில் இருப்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை;** நம்முடைய சந்ததிகளும் அமைதியிலும் சமாதானத்திலும் இருப்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை; மேலும், உலகத்தின் அமைதி மற்றும் சமாதானத்திற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை.

அல்லாஹ் உலகத்தை இருளிலிருந்து ஒளியை நோக்கிக் கொண்டு செல்வதற்கான வழிவகையாக நம்மை ஆக்குவானாக. அல்லாஹ் நமக்குச் சிறந்த முறையில் கடமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக.

**இப்பொழுது நாம் துஆ செய்வோம்.** துஆவில், மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரையும் மாநாட்டின் அருள்களைப் பெறக் கூடியவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக என்றும், ஒவ்வொருவரையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக என்றும், உலகின் சூழ்நிலையில் விரைவில் எல்லா வகையிலும் அமைதி மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துவானாக என்றும், இவ்வாறு நாம், நம்முடைய மாநாடுகளை மீண்டும் விசாலமான முறையில், எல்லா விதமான கவலைகளில் இருந்தும் விடுபட்டு அதே மகத்துவத்துடன் நடத்த முடியட்டுமாக என்றும் அனைவரும் துஆ செய்யுங்கள்.

மேலும், நாம் மாநாடுகளை, நமது ஆன்மிக மற்றும் அறிவுத் தாகத்தைத் தணித்துக் கொள்வதற்கும் வழியாக ஆக்கிக் கொள்வதற்கும், உண்மையில், நம்முடைய வாழ்வை இஸ்லாமிய போதனைகளுக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளக் கூடியவர்களாக ஆவதற்கும், நாம் அல்லாஹ்வின் அன்பு மற்றும் அவனுடைய அருள்களைப் பெறக் கூடியவர்களாக இருப்பதற்கும் அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக என்றும் துஆ செய்யுங்கள். **(துஆ)**

*துஆவிற்குப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

ஜெர்மனி மாநாட்டுக்கான வருகையை முதலில் கேட்டுக் கொள்ளுங்கள். பிறகு, முழக்கமிடுங்கள். **(**நிர்வாகத்தினர்**)** கூறுகிறார்கள்: மாநாட்டின் நமது மொத்த வருகை **19,782** ஆகும். அதில் பெண்கள் **9482** பேரும் ஆண்கள் **10,300** பேரும் ஆவார்கள். ஏனைய ஊடகங்கள் மூலமாக ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அல்லது கேட்டுக் கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையும் **40,000** -க்கும் அதிகமாக உள்ளது. சரி! இப்போது நீங்கள் நடத்தவிருக்கும் அடுத்த நிகழ்ச்சியை நடத்துங்கள்.

(அல் ஃபஸ்ல் இன்டர்நேஷனல், செப்டம்பர் 27, 2022
பக்கம் 6 முதல் 10 வரை)